பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 30 (13—3—68) புதன் ★ வெளியூர்: பங்குனி 1 (14-3-68) வியாழன் [இதழ்: 226

குடும்பக்
கட்டுப்பாடு
செய்திடுவீர்

பிள்ளையோ பிள்ளை தொல்லையோ தொல்லை என்கின்ற நிலை ஏற்படாமல், குடும்பம் தெவிட்டாதஇன்பமாக விளங்கவும், குழந்தைகள் அறிவு நிறைந்து ஆற்றல் மிகுந்தவர்களாக இருக்கவும் அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்.

குடத்திலிட்ட விளக்கைக் குன்றின்மேல் ஏற்றுவோம்!

கிராமக் குடியாட்சி முறையில் தமிழகம் வழிகாட்டியாக அமையட்டும்!

மக்கள் வாழ்வாங்கு வாழ ஊராட்சிகள் ஆற்றிவரும் பணிகள்--அமைச்சர் முத்துசாமிவிளக்கம்

சென்னை, மார்ச் 13—

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்பது, ஔவை மூதாட்டியின் அருந்தமிழ். நாட்டின் பெருமைக்கு இயற்கை வளத்தினும் ஊக்கமிக்க மக்கட் சிறப்பே பெருங் காரணமாகும்.

"மக்களைப் பொதுப் பணிக்கு ஊக்குவிப்பதான கிராமக் குடியாட்சி முறை, தமிழக மக்களுக்குப் புதியதல்ல; பண்டை நாள்தொட்டு இற்றை நாள்வரை தமிழகத்தில் கிராமக் குடியாட்சி நல்ல முறையில் வளர்ந்து, சமுதாயத்தின் நல்வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்து வந்திருக்கிறதென்ற உண்மையைத் தமிழக வரலாற்றுப் பொன்னேடுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

"சங்க நூல்களில் 'மன்றம்', 'பொதியில்' எனக் குறிக்கப்பட்டவை பின்னர் ஊராட்சிகளாக உருப்பெற்றுப் பெரும் புகழுடன் செயல்பட்டுவந்தன. இடையிலேற்பட்ட சில அரசியல்—பொருளாதார—சமூக மாற்றங்களால், அவ்வூராட்சிகளின் புகழ் குடத்திலிட்ட விளக்குப்போல் மங்கத் தலைப்பட்டது! அதனை குன்றின் மேலிட்ட விளக்காக ஆக்கவேண்டுவது நம் தலையாய கடனாகும்!

"விடுதலை பெற்ற நாட்டின் உண்மையான வளர்ச்சிக்குக் கிராம வளர்ச்சியே அடிப்படை என்ற பேருண்மையை அண்ணல் காந்தியடிகள் வலியுறுத்தினார்கள்.

"கிராமக் குடியாட்சிகள் வேரும் விழுதுமாக நிலைபெற்று நல்ல முறையில் அமைந்து செயலாற்ற முற்பட்டாலன்றி, நமக்குக் கிடைத்துள்ள விடுதலை--குடியாட்சி என்பதெல்லாம், பேச்சளவிலும் ஏட்டளவிலேயுமே நின்றுவிடும்!

"குடியாட்சி இந்நாட்டில் நல்ல முறையில் நிலைத்திருக்க வேண்டுமென்று நினைக்கின்ற அனைவரும், கிராமக் குடியாட்சிகள் சீரிய முறையில் இயங்கப் பாடு ட வேண்டியது இன்றியமையாததாகும். இத்துறையில், தமிழகம் நம் நாட்டிற்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ வேண்டுமென்பது என் அவா! நம் அனைவருடைய அவாவும் அஃதே என்பதுபற்றி எனக்கு ஐயமில்லை!"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், இன்று சட்டமன்றத்தில் விளக்கினார்.

"சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்—நாட்டு வளர்ச்சிப் பணித் திட்டங்கள்—உள்ளூர் மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றிற்கு ரூ. 5,61,78,600-மும், பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் ஆகியவற்றிற்காக ரூ. 2,74,97,700-மும் மானியமாக அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கையை சட்டமன்றத்தில் வைத்து அமைச்சர் ஆற்றிய உரையில் மேலும் கூறியதாவது:—

சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் காரணமாகத் தமிழகத்தில் இன்று 12,407 ஊராட்சி மன்றங்களும், 457 பேரூராட்சி மன்றங்களும், 374 ஒன்றியங்களும், 14 நகரியங்களும், 88 நகராட்சிகளும், சென்னை மாநகராட்சி மன்றமும் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன. இவ்வமைப்புகள் ஆற்றிவருபவை அரும் பெரும் பணிகளாகும். மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகள் வகைப்படுத்தப்பட்டு ஊராட்சிகளில் நிறைவேற்றப்படுகின்றன.

தென்னாற்காடு மாவட்டம் கல்ராயன்மலைப் பகுதியில் உள்ள பழங்குடி மலைவாழ் மக்களின் நலனுக்காகத் தனியான வளர்ச்சி வட்டாரம் ஒன்றினை துவக்க அரசு ஆலோசனை செய்துவருகிறது.

இம்மாதிரியான வளர்ச்சி வட்டாரங்கள் சேலம் மாவட்டம் கொல்லிமலையிலும், ஏற்காடு மலையிலும் உள்ளன.

நடப்பு ஆண்டில் இவ்வட்டாரங்களுக்காக ரூ. 19.81-இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளன.

இந்த மானியத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,61,73,600 மானியம் கோரியிருப்பினும் மொத்தமாக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ரூ. 52-கோடியே 62 இலட்சம் செலவாகுமென்று இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்டுள்ளது; இது இவ்வாண்டின் மொத்த நிதி ஒதுக்கத்தில் 24-சதவீதமாகும்.

சமுதாய வளர்ச்சித் துறை மேன்மேலும் நன்கு செயலாற்றி, பொலிவும் வலிவும் உடையதாயும் உலகத்திற்கொரு புதுமையானதுமான சமுதாயம் அமைக்கத்தக்க உங்கள் மேலான கருத்துக்களை இப்பேரவையில் வழங்குமாறு மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசுத் துறை காட்டும் நட்டக் கணக்கு

3 உருக்கு ஆலைகளின் இழப்பு ரூ. 73 கோடி

புதுடில்லி, மார்ச் 12—

வடக்கே பொதுத் துறையில் இயங்கிவரும் மூன்று பெரிய உருக்கு ஆலைகளான துர்க்காப்பூர், ரூர்க்கேலா, பிலாய் ஆகியவற்றில் 1967 மார்ச் 31-வரை மொத்தம் 733.33 மிலியன் (ரூ. 73.333 கோடி) இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் உருக்குத் துறையமைச்சர் டாக்டர் சென்னா ரெட்டி அளித்த எழுத்து மூல பதிலில் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

1967 மே 31-ம் நாள்வரை, இந்த மூன்று உருக்காலைகளிலும் அரசு போட்டுள்ள முதலீடு ரூ. 914.8 கோடியாகும்.

பல்வேறு காரணங்களால் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆகாஷ்வாணி தமிழ்ச் சொல்!

காங்கிரசு உறுப்பினர் கூற்று!

சென்னை, மார்ச் 13—

இன்று சட்டமன்றக் கேள்வி நேரத்தில் காங்கிரசுக் கட்சிக் கொறடாவான திரு. கே. விநாயகம், "'ஆகாஷ்வாணி' என்பதும் தமிழ்ச் சொல்தான்" என்றதும்: அவையில் சிரிப்பொலி எழுந்தது!

உடனே திரு. விநாயகம் தமது கூற்றை உறுதிபடுத்தும் வகையில் பின்வருமாறு கூறினார்:—

"'ஆகாஷ்' என்பது தமிழ்தான்; அதாவது, 'ஆகாஷ்' என்பதைத்தான், 'ஆகாஷம்', 'ஆகாயம்' என்கிறோம்; ஆகாயம் தமிழ்தான். (சிரிப்பு)

அவைத் தலைவர்:—"சட்டமன்ற விதிப்படி, ஓர் உறுப்பினர் தமது கேள்வியில் ஒரு கருத்தைத் தெரிவித்ததால், அந்தக் கருத்து சரியானதுதானா என்பதற்கு அவரே பொறுப்பேற்க வேண்டும்; ஆகவே, 'ஆகாயம்' என்பது தமிழ்தான் என்று உறுதிப்படுத்துவதற்குத் தாங்கள் பொறுப்பேற்கிறீர்களா?"

(திரு. விநாயகம், 'பொறுப்பேற்பதற்கில்லை' என்று கூறிக் கையை விரித்துவிட்டு, மேற்கொண்டு தமது கேள்வியைத் தொடர்ந்து வேறு வகையில் மாற்றிக் கேட்டார்.)

கோவைப் பஞ்சாலைப் பிரச்சினை-- உண்மை நிலை என்ன?

நெருக்கடி தமிழகத்துக்கு மட்டுமல்ல-- காங்கிரசு ஆளும் மாநிலத்துக்கும்தான்!

உதவ வேண்டியது மத்திய அரசின் கடமை-- குற்றம் மாநில அரசைச் சார்ந்தது அல்ல!

['நம் நாடு' செய்தி நோக்கு]

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கோவையில் உள்ள சுமார் 15 பஞ்சாலைகளை மூடிவிடுவது எனத் தென்னிந்திய ஆலை உரிமையாளர்கள் சங்கம் எடுத்திருக்கும் முடிவினை, காங்கிரசு நாளிதழ் ஒன்று வழக்கமான 'அரசியல் பாணி'யில் பிரசுரித்துள்ள போக்கு, 'பஞ்சாலை நிலைமைகளுக்காக வருந்துவதா அல்லது பத்திரிகையின் போக்குக்காக வேதனைப்படுவதா' என்ற முறையில் இருக்கிறது!

'கணவன்—மனைவி குடும்பச் சண்டை; கழக ஆட்சியின் இலட்சணம் பாரீர்' என்று மட்டுமே செய்திகளைச் செய்து பழக்கப்பட்ட அந்த நாளிதழ், பஞ்சாலைச் செய்தியை, 'தமிழகத் தொழில் துறையில் பெரும் நெருக்கடி' என விளித்து, 'மாநில அரசுதான் பொறுப்பு' என்று—படிப்பவர் உணரும் வகையில் பிரசுரித்திருக்கிறது!

உற்பத்தியான நூல் தேக்கம் பெற்றுள்ளதால், ஏற்கனவே இந்த முடிவினை, பம்பாயில் கூடிய அனைத்திந்திய சங்கம் ஒன்று அறிவித்திருந்தது.

"நிலைமை சீர்திருந்தாவிடில், தென்னகத்தில் மட்டுமல்ல—இந்தியா முழுமையிலும் உள்ள உற்பத்தியை நிறுத்திவிடுவது" என்றும் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது!

இந்த ஆண்டு மட்டுமல்ல; நூல் தேக்கம் காரணமாகச் சென்ற ஆண்டில் பம்பாய் ஆலைகள் அனைத்தும் கட்டாய விடுமுறையளித்து, உற்பத்தியை நிறுத்திவைத்திருந்ததும் இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

கோவையில் மட்டும் 10,500 தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும்; இந்தப் பிரச்சினை, தொடர்ந்து இருந்துவரும் ஒரு நிலைமையாகும்.

நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் தென்னகப் பஞ்சாலைகள், 32 சதவிகிதம் நூல் கட்டுகளைத் தயாரிக்கின்றன.

1966-ம் ஆண்டு 76,000 பேல்களாகவும், 1967-ம் ஆண்டு 1 08,000 பேல்களாகவும், 1968 பிப்ரவரி வரையில் மட்டும் 1,16,000 பேல்களாகவும் நாடு முழுவதிலும் உள்ள நூல் உற்பத்தி உயர்ந்து கொண்டே போயிருக்கிறதே தவிர, அதனைக் கொள்முதல் செய்யும் நிலைமை உயரவில்லை!

எனவேதான், நூல் தேக்கம்; அதனால், ஆலைகள் மூடப்படும்நிலைமை; நூலுக்குத் தேவையான பஞ்சுக்கட்டுக்களையும் இரயில்வேக் கிடங்குகளிலிருந்து பணம் கட்டி எடுத்துச் செல்ல முடியாத நட்டப் போக்கு!

இந்த நிலைமைகளை, தொடர்புள்ள மத்திய அமைச்சர் தினேஷ் சிங்கிடம் தூதுக்குழு மூலம் எடுத்துச் சொல்லுவதென ஏற்கனவே அனைத்திந்திய ஆலை அமைப்பு முடிவு செய்திருக்கிறது.

"இந்தப் பிரச்சினையில் இந்திய அரசு குறுக்கிட்டு பெரிய மனது காட்டினால் தவிர, ஆலைகளை மூடும் முடிவினை தவிர்ப்பது இயலாத காரியம்"

என, தென்னிந்திய ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கத் தலைவர் கே. சுந்தரம் எம்.பி. குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

"மத்திய அரசு முன்வந்து பொதுத்துறை நிறுவனமான 'ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன்' மூலம், தேங்கியிருக்கும் நூல் பேல்களை நிறைய அளவுக்கு வாங்கி நிலைமைகளைச் சீராக்க முயலலாம்; அல்லது, 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்'கள் மூலம் ஏற்றுமதிக்கு உதவலாம்" என திரு. கே. சுந்தரம் யோசனைகள் தெரிவித்துள்ளார்.

இதுதான் உண்மை நிலை! ஏதோ இது, 'தமிழக அரசின் தவறுகளால் விளைந்த ஒன்று' என்றோ, அல்லது தமிழக அரசின் தனித்த முயற்சியில்—அதிகாரத்தில் சீராக்கிவிடக் கூடிய நிலைமை என்றோ இங்குள்ள அரசியல்வாதிகள் எழுதவோ பேசவோ முனைவது, அவர்களுக்குள்ள 'தொழில் பசி'யினைத்தான் காட்டும்!

அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் மீண்டும் கூடினால்...!

ஆட்சிமொழிப் பிரிவைத்தான் முதலில் நீக்குவர்!

'நாட்டைப் பிளவுபடுத்தும் சக்தி இந்தித் திணிப்பு முயற்சியே'--- பேராசிரியர் க. அன்பழகன் முழக்கம்

நாடாளுமன்ற மக்களவையில், குடியரசுத் தலைவர் உரைமீது நடைபெற்ற விவாதத்தில், நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பங்குகொண்டு ஆற்றிய உரையில், நாட்டைப் பிளவுபடுத்தும் சக்தி எது என்பதையும், ஒருமைப்பாட்டின் பேரால் இந்தியைத் திணிக்க முயல்வது விரும்பத்தகாத விளைவையே உண்டாக்கும் என்பதையும் எடுத்துக்காட்டி எச்சரிக்கை செய்தார். அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

அரசின் தவறுகளைச் சுட்டிக் காட்டத்தான் !

மக்களவை — மாநிலங்களவை உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத்தில் மதிப்புக்குரிய குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்திய போது தி. மு. கழகம் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருந்தது குடியரசுத் தலைவர் மீது தனிப்பட்ட முறையிலோ அவர் பொறுப்பின் மீதோ எங்களுக்கிருந்த மரியாதைக் குறைவால் அன்று; மாருக, நாட்டின் பலபகுதிகளில் மக்கள் குரலுக்குச் செவிசாய்க்காமல் நடந்துகொண்ட மத்திய அரசின் போக்கைச் சுட்டிக்காட்டவே— என்று முதலில் கூற விரும்புகிறேன்.

மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை—குறிப்பாக இந்திய அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ள வழிகாட்டித் தத்துவங்களைக் கொஞ்சம்கூடக் கருதிப் பார்ப்பதே இல்லை!

திரு. பந்தர் அவர்கள் பேசிய போது, நாட்டிலே உள்ள பிற்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட மக்களும், விடுதலைக்கு முன்னுளில் எப்படி இருந்தார்களோ அப்படியே இன்றைக்கும் இருப்பதைச் சுட்டிக்காட்டினுர்.

அதுபோலவே, அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டி வருத்தம் தெரிவிக்கும் வகையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம், அந்தக் கூட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

"இந்தக் குடியரசுத் தலைவருக்குப் பதிலாக, எதிர்க் கட்சிகள் ஆதரித்த வேருெரு குடியரசுத் தலைவர் இருந்திருந்தால், பேராசிரியர் இரேன் முகர்ஜி அந்தக் கூட்டத்திலிருந்து வெளியேறி இருப்பாரா—நாங்கள் கலந்துகொள்ளாமல் ஒதுங்கியிருப்போமா" என்று சில உறுப்பினர்கள் கேட்டார்கள். 'குடியரசுத் தலைவர்' என்ற அந்த உயர்ந்த பெரும் பொறுப்பை ஏற்றிருப்பவர் யாராக இருந்தாலும் எங்கள் நிலை ஒன்றுதான்—என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வடக்கைச் சேர்ந்தவர்கள் படித்துப்பார்க்கட்டும்!

இப்போதுகூட, நான், குடியரசுத் தலைவரின் உரையை—இங்கே பேசிய உரையையன்று; உலகத் தமிழர் மாநாட்டைத்திறந்து வைத்து ஆற்றிய பேருரையை பாராட்ட விழைகிறேன்.

மாநில அரசின் சார்பில் எங்கள் முதல்வர், தம் நன்றியை அங்கே தெரிவித்திருக்கிருர்கள். மதிப்புக்குரிய குடியரசுத் தலைவர் அவர்கள், தமிழ் மொழியை—தமிழ்ப் பண்பைத் திட்டவட்டமாக வரையறுக்கும் வகையில் பேசிய அந்தப் பேச்சுக்கும் நாங்கள் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேம்; வடநாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த உரையை ஒருமுறை படித்துப் பார்க்க வேண்டும்.

மக்களாட்சியை வாழவைக்கும் வழி எது?

நாட்டின் எந்தப் பகுதியில் நடைபெறும் சட்டத்தை மீறிய கலவரமானுலும் அதைப்பின்னின்று இயக்கிவைப்பது யாரானுலும்—அதைக் குடியரசுத் தலைவருடன் சேர்ந்து நாங்களும் கண்டிக்கிறேம்.

வீதிகளில் நடைபெறும் வெறித்தனமான கிளர்ச்சிகளால் மக்களாட்சி அமைப்பு உருக்குலைந்து நாட்டின் ஒற்றுமை சிதையும் என்பதை ஒப்புக்கொள்கிறவர்கள் நாங்கள் !

குடியரசுத் தலைவர் சொன்னது போல், பண்பார்ந்த வாதங்களாலே கருத்துப் புரட்சி செய்வது ஒன்றுதான் மக்களாட்சியை வாழ வைக்கும் வழி!

"அறிவுள்ள வாதங்களாலே அதிகாரத்தில் உள்ளவர்களின் மனத்தை மாற்ற முயன்று, அதுவே பலவினமாக ஆட்சியாளர்களால் மதிப்பிடப்படுகிற போது, பெரிய அளவில் கிளர்ச்சிகள் செய்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதே வழி" என்று மக்கள் கருதுகிருர்கள் !

பல சமயங்களில் அத்தகைய கிளர்ச்சிகள்தான் மக்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தன!

வன்முறைக்கு வளைந்து கொடுக்கத் தயாராக இருக்கும் அரசு, அறிவார்ந்த வாதங்களை ஏற்க மறுக்கிறது! சட்டத்தை மதிக்காத மனப்பாங்கு மக்களிடையே உருவாக இதுவே காரணம்!

அமைதியாக — சட்டத்துக்குட்பட்ட அறவழிகளின் மூலமே எங்கள் இலட்சியத்தை அடைந்தாக வேண்டும் என்ற முறையில் தான் ஓர் அரசியல் கட்சியாக நாங்கள் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறேம் !

ஐயத்திற்கிடமின்றி வன்முறைச் செயல்களை நாங்கள் கண்டிக்கிறேம் !

செய்யவேண்டியதைச் செய்யும் தமிழக அரசு!

தென்னகத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்துச் சில மாணவர்கள் அரசியல் சட்டத்தின் 17-ம் பிரிவை எரித்தல் போன்ற செயல்களைக் குறிப்பிடும்போது சில உறுப்பினர்கள், நிதானமிழந்து காணப்பட்டார்கள் !

"தமிழக அரசும், தமிழக முதல்வர் அண்ணு அவர்களும் இந்தி எதிர்ப்பாளர்கள்—இந்தித் திணிப்பை எதிர்ப்பவர்கள்; என்ருலும், இந்தப் பிரச்சினையில் சட்டம்— ஒழுங்கை நிலைநாட்டத் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள்; குற்றவாளிகள்மீது காவலர் வழக்குப் பதிவுசெய்திருக்கிருர்கள்" என்ற உறுதியைத் தர விழைகிறேன்.

எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தப் பிரச்சினையில் நிதானம் இழக்கவேண்டாம். சட்டம் — ஒழுங்கை மதிக்கும் எந்த அரசும் என்ன செய்யுமோ அதைத் தமிழக அரசு செய்யும்.

முழுப் பொறுப்பும் மத்திய அரசையே சாரும்

இன்னம் சொல்லப்போனுல், மொழிச் சிக்கல் போன்ற பிரச்சினைகளில் தெற்கே நடக்கும் போராட்டங்களுக்கான பொறுப்பு, முழுக்க முழுக்க மத்திய அரசை மட்டுமே சாரும் !

மத்திய அரசின் மொழிக் கொள்கையின் விளைவாய், நாட்டின் எந்தப் பகுதியில் எந்த முறையில் கிளர்ச்சிகள் நடைபெற்ருலும், அவற்றின் முழுப்பொறுப்பும் மத்திய அரசையே சாரும் !

ஒற்றுமையின் பெயரால் விபரீதப் போக்கு !

"நாட்டின் ஒற்றுமையைப் பேணுவதும் ஒருமைப்பாட்டை உருவாக்குவதுமே அரசின் முனைப்பான கொள்கை" என்று குடியரசுத் தலைவர் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிருர். அது உண்மையாய் இருக்க நான் விழைந்தாலும், அது உண்மை அன்று.

ஒற்றுமையின் பெயரால் அவர்கள் இந்தியைத் திணிக்கவிரும்புகிருர்கள் ; 'இந்தியைத் திணிப்பதன் மூலமே நாட்டில் ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும்' என்று எண்ணுகிருர்கள்; ஆனுல் உண்மையோ, நேர்மாருக இருக்கிறது !

இந்தித் திணிப்பால், தாங்கள் மொழி அடிப்படையில் பாகுபடுத்தப்படுவதாக மக்கள் உணருகிருர்கள்—நம்புகிருர்கள் !

எந்தக் காரணத்தைக் கொண்டும் மக்களின் மொழிகளை வேரறுத்து வீழ்த்திவிட முடியாது! ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அவர்களோடு நிலவிய மொழிகள் அவை! இந்தித் திணிப்பைச் சிலர் ஒப்பலாம்—பலர் எதிர்க்கிருர்கள் !

ஆகவே, அரசின் இன்றைய கொள்கையின் மூலம், நாட்டில் ஒற்றுமையை—ஒருமைப்பாட்டை வளர்க்கும் 'முனைப்பான இலட்சியத்தில்' அரசு வெற்றியடையுமா என்பதை ஆராய்ந்தாக வேண்டும்.

வேறுபாட்டு உணர்வுக்கு வழி வகுத்துவிட்டது!

ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவும், அதோடு ஒட்டிக்கொண்டிருக்கும் தீர்மானமும் அந்த 'முனைப்பான இலட்சியத்தை' அடைய உறுதியாக இருக்குமா என்பது ஐயத்துக்குரியதே !

மாருக, நாட்டின் நிர்வாகம், 'இந்திப் பகுதி—ஆங்கிலப் பகுதி' என்று பிளவுண்டு கிடக்கிறது !

'இந்தி இந்தியா—ஆங்கில இந்தியா' என்ற வேறுபாட்டு உணர்வை உண்டாக்க அது வழி வகுக்கிறது !

இந்தி வெறியர்கட்குப் பணிந்து, இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி' என்று தப்பாக முடிவு செய்த அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள்தாம் இவ்வளவுக்கும் காரணம் !

அதே அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் இன்னெரு முறை கூடி, தாங்கள் உருவாக்கிய அரசியல் சட்டத்தின் ஏதாவதொரு பிரிவை நீக்கிவிட முடிவு செய்ய முடியுமானுல், அது, அரசியல் சட்டத்தின் ஆட்சிமொழிப் பிரிவாகத்தான் இருக்கும்.

ஆட்சிமொழிக் குழுவுக்குத் தாம் அளித்த மாறுதலைக் குறிப்பில், காலஞ்சென்ற பி. சுப்பராயன் அவர்கள் இப்படிக் குறிப்பிட்டிருக்கிருர் :—

"இந்தியாவைப் போன்ற (ஒரு துணைக்கண்டம் என்று சொல்லத் தக்க அளவுள்ள) ஒரு பெரிய நாட்டுக்கு, சுவிட்சர்லாந்தைப்போல மூன்று மொழிகளோ பெல்ஜியம்—கனடா நாடுகளைப்போல இரண்டு மொழிகளோ ஆட்சிமொழிகளாக இருக்க வேண்டுமென்ற சாதகக் கூற்றையே அரசியல் நிர்ணய சபை அந்நாளில் கருதிப் பார்க்கவே இல்லை."

அரசியல் நிர்ணய சபையில் முக்கிய அங்கம் வகித்த இந்திக்காரர்களினுல்தான், இந்தி இந்த இடத்தைப் பெற்றது. அதை இந்தி பேசாத மக்கள் ஏற்றுக்கொள்ளாமைதான் இந்தக் கிளர்ச்சிக்குக் காரணம் !

இந்தியை ஆட்சிமொழியாக ஒப்புக் கொண்டதைப் பற்றிப் பேசும்போதெல்லாம் நண்பர்கள் காந்தியடிகளைக் குறிப்பிடுகிருர்கள்.

காந்தியார் கூறியதன் நோக்கம் என்ன ?

"உருது – தேவநாகரி இரண்டு வரி வடிவங்களிலும் எழுதத் தக்க இந்துஸ்தானியைத் தேசிய மொழி ஆக்க வேண்டும் என்பதுதான் காந்தியாரின் விருப்பம்" என்பது காங்கிரசிலுள்ள படித்தவர்களுக்குப் புரியும்.

(3-ம் பக்கம் பார்க்க)

தேவைப்படும் இடத்தில் நியாயவிலைக் கடை

திறக்கப்படுவதற்கான அதிகாரம் மாவட்டக் கலெக்டருக்கு உண்டு

அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவிப்பு

சென்னை, மார்ச் 12 —

"குடும்பக் கார்டு முறை செயலில் இல்லாத எந்தப் பகுதியிலாவது அரிசி கிடைக்காத நெருக்கடி நிலை ஏற்பட்டால், 'அங்கு நியாய விலைக் கடை ஏற்படுத்துவது அவசியம்' என்று கருதினுல், மாவட்ட ஆட்சித் தலைவர் நியாய விலைக் கடையைத் திறக்க வசதியளிக்கப்பட்டிருக்கிறது"

என்று உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது :—

"தமிழ் நாட்டில் 1.24 கோடி மக்களுக்குக் குடும்பக் கார்டு மூலம் நியாய விலையில் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; அதாவது, தமிழ் நாட்டின் மக்கட் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் குடும்பக் கார்டு முறையின் பலனை அடைகின்றனர்.

மதுரை, இராமநாதபுரம், கோவை, கன்னியாகுமரி, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் பற்றுக்குறை மாவட்டங்களாகும்; நீலகிரியும், சென்னையும், மிகவும் பற்றுக்குறை மாவட்டங்களாகும்; எனவே, நீலகிரி மாவட்டத்திலும் குடும்பக் கார்டு வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் சுமார் ஆறு இலட்சம் பேர் குடும்பக் கார்டு மூலம் அரிசி பெறுகிருர்கள்.

இந்தக் குடும்பக் கார்டு முறை மூலம் விலைகள் ஏருமல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன."

காமராசர் பேச்சு :

கருத்துக்கும் கவனத்துக்கும் சில வரிகள்!

[சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சென்ற திங்களன்று காமராசர், மாணவர்கூட்டத்தில் ஆற்றியிருக்கும் சொற்பொழிவிலிருந்து சில வரிகளை 'நம் நாடு' வாசகர்களின் கருத்துக்கும் கவனத்துக்கும் கீழே தந்துள்ளோம்; தலைப்புகள் நாம் தந்தவை]

மும்மொழித் திட்டம் -- வடக்கத்தியர் அகராதிப்படி !

மும்மொழிப் பிரச்சினை இருக்கிறது. அவனுக்கு இந்தி—இந்தி—இந்தி—இந்திதான் மும்மொழி; எனவே, இங்கு ஆங்கிலம் படித்தால் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பு கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது !

இணைப்பு மொழி -- அதற்கு அவர்கள் இணங்க வேண்டுமே !

ஆங்கிலம் பொது மொழி. அவர்கள் இந்தி எழுதட்டும் ; நாம் தமிழில் எழுதுவோம். இந்தியும் தமிழும் சமம் ; இதை நான் உங்களிடம் சொல்லுகிறேன் ; அவர்களிடம் சொல்லவில்லை ; சொல்லும் சமயம் வரும்.

பதவிதான் பெரிதா -- அது போன பின்னர்தானே தத்துவம் !

அதிகாரத்தில் இருப்பதையே கௌரவமாக நினைத்துக் கொண்டிருக்கிருர்களே—என்ன செய்வது ? நேர்மையாக நடந்து கொண்டால் மக்களின் அதிருப்தி வந்தாலும் வரலாம் ; ஆனுல் இதற்காகப் பயப்படுவதா ? பதவிதான் பெரிதா, என்ன ?

யாரைச் சொல்லுகிருர் ?

"அரசியல் தலைவர்களிடம் மக்களுக்கு மரியாதை போய்விட்டது ! பிரச்சினைகள் வரும்போது அவர்கள் தடுமாறியதுதான் காரணம் !

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மறுவாழ்வளிப்பு

நீலகிரி மாவட்டத்தில் உருவாக்கும் தமிழக அரசின் திட்டம்

"1967 – 68-ம் ஆண்டு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு வாழ்க்கை வழிமுறை செய்து கொடுக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு, நீலகிரி மாவட்டத்தில் ஒதுக்குக் காடுகளில் ரூ. 3.75 கோடி செலவில் 3,750 ஹெக்டர் நிலப்பரப்பில் தேயிலைத் தோட்டம் உருவாக்கும் திட்டம் ஒன்றைத் தயாரித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது; இது, தாயகம் திரும்பும் அகதிகளுக்கு உடனடி வேலை வாய்ப்பு அளிப்பது மட்டுமல்லாது, தொழில்வளம் பெருகி வெளிநாட்டுச் செலாவணி நமக்குக் கிடைப்பதற்கு வகை செய்கிறது"

என்று வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி, சட்ட மன்றத்தில் அளித்த குறிப்புரையில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:—

வனத் துறை அமோக உணவு உற்பத்தி செய்வதிலும் தனது பங்காகக் காட்டிலிருந்து வேளாண்மைக்காக நிலம் ஒதுக்கியுள்ளது. இந்த நிலங்களைக் கோயம்புத்தூர், மதுரை, சேலம் மாவட்டங்களில் ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலங்களை ஐந்தாண்டுக் குத்தகையாக—ஆண்டுக் குத்தகை விகிதத்தில்—நிலமில்லா விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

இது மட்டுமல்லாது, காடுகளில் மரத் தோட்டம் ஏற்படுத்துவதுடன், தோட்டங்களில் மர வரிசைகளினூடே விவசாயமும் 'கும்ரி' முறையில் செயல்படுத்தப்பட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வனத் துறை பெரிதும் உதவிவருகிறது.

தோல் பதனிடும் தொழிலுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதிலும் வனத்துறை ஈடுபட்டுள்ளது மூலப் பொருட்கள் இங்கேயே உற்பத்தி செய்யப்படுவதால், 1967-ம் ஆண்டில் மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்களால் மேட்டுப்பாளையத்தில் 'டேன் இந்தியா வாட்டில் சாயப் பொருள் உற்பத்தி நிறுவனம்' துவக்கிவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(4-ம் பக்கம் பார்க்க)

அரசியல் நிர்ணய...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இன்று ஆட்சியில் உள்ள இந்தியை, காந்தியார் என்றும் சொன்னதில்லை!

அந்த நாட்களில் இந்தி – உருது சிக்கல்கள் இருந்த நிலையில், இந்துக்களுக்கும் - முஸ்லிம்களுக்கும் பொது மொழியாக இருக்கட்டும் என்றுதான் காந்தியார் இந்துஸ்தானியை விரும்பினர்.

அதுமட்டுமன்று; இந்துஸ்தானியைக்கூட காந்தியார், தேசிய மொழியாக்க வேண்டுமென்றுதான் எண்ணினரே தவிர ஆட்சிமொழியாக அன்று!

நாட்டின் பல பகுதிகளில் வாழும் மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் சென்று எளிதில் பழகிட வசதி செய்திடுவதே அவருடைய நோக்கம்!

ஒவ்வொரு ஆண்டும் ரூ. 6,250 கோடி மதிப்புள்ள 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் விற்கவும் வாங்கவும் படுகின்றன

நம் நாட்டில் தகரம், பிளாஸ்டிக், அட்டைப்பெட்டிகள் அதிகரிக்காவிட்டால் அன்றாட உபயோகப் பொருட்கள் கிடைப்பதே அரிதாகிவிடும்

வனஸ்பதி அல்லது பற்பசை வாங்கும்போது, நீங்கள் வனஸ்பதி டின்னையோ, பற்பசை ட்யூபையோ பற்றிச் சிந்திக்கமாட்டீர்கள், அது சகஜம். அந்த டின்னோ அல்லது ட்யூபோ இல்லாவிடில் வனஸ்பதியோ பற்பசையோ கிடைக்குமா? கிடைத்திருக்காது. நம் நாட்டின் ஒவ்வொரு மூலைகளிலும் உள்ள இடங்களுக்கு ஏராளமான அளவுகளிலும், பாதுகாப்பாகவும், கலப்படமில்லாமலும் இப்பொருட்களை அனுப்ப 'பாக்' செய்யும் வசதி இல்லாமல் முடியாது.

அன்றாட வாழ்வில் 'பாக்கேஜிங்' பணி சிறியதல்ல என்பது இதனால் விளங்கும். மேலும் அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி பெருகப் பெருக பாக்கிங் சாதனங்களான டின்களும், பிளாஸ்டிக் ஜாடிகளும், அலுமினிய ட்யூபுகளும், அட்டைப் பெட்டிகளும் அதிகரிக்கவேண்டும்.

இவை யெல்லாவற்றையும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் தயாரிக்கின்றனர். இந்தியா முழுவதும் உள்ள தங்கள் 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் அன்றாட உபயோகப்பொருட்களுக்கு தேவையான 'பாக்கிங்' வசதிகளை அளிக்கின்றனர். பொருட்களைவிஞ்ஞான ரீதியில் சோதித்து, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளைச் சிபாரிசு செய்வது மெட்டல் பாக்ஸ் கம்பெனியர் அளிக்கும் வசதிகளில் ஒன்று. 'பாக்' செய்வதில் வெளிநாட்டு தொழில் அறிவும் துணை புரிகிறது.

அன்றாடத் தேவைப் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானல் மற்ற வசதிகளுடன் சீர்திருத்தப்பட்ட சிறந்த 'பாக்கிங்' வசதிகளை தாராளமாக அளிக்கவேண்டும் என்பதே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் குறிக்கோள். இந்த நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊக்க மளிக்கிறது.

MB
மெட்டல் பாக்ஸ்
பாதுகாப்பான பாக்கிங்

JWTMB 4198

கழக ஆட்சியின் முதலாண்டு நிறைவு

சென்னையில் அமைச்சர்கள் பங்கேற்ற விழா

சென்னை, மார்ச் 13—

தமிழகத்தில் கழக ஆட்சியின் ஓராண்டு நிறைவினைக் கொண்டாடும் வகையில், சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம், நேற்று மாலை பட்டினப்பாக்கம் திடலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி, செ. மாதவன், சாதிக் பாட்சா, எம். முத்துசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மற்றும் தோழர்கள் எஸ். இராகவானந்தம், டி. கே. கபாலி எம்.சி., பம்பாய் த. மு. பொற்கோ, பக்கிரி ஆகியோரும் பேசினர்.

(அமைச்சர்களின் சொற்பொழிவு பின்னர் வெளிவரும்.)

நடக்க இருப்பவை

14--3--68

சென்னை 25-வது வட்டம்

கொண்டியம்பதி அண்ணா படிப்பகத் திறப்பு விழா; மாலை 7 மணிக்கு ரங்க பிள்ளைத் தோட்டத் தெருவில்; தலைவர்: திருமதி சி. துரைக்கண்ணு; திறப்பாளர்: அமைச்சர் செ. மாதவன்; அண்ணா படத் திறப்பாளர்: குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ.; பேசுவோர்: துரையரசன் எம்.எல்.ஏ., ந. வீரஜின்னு, என்.வி.என். சோமு பி.ஏ., பி.எல்., ஜீவாகலைமணி பி.ஏ., பாண்டியன், மா.ரா. ஏழுமலை, ஆ. கோவிந்தராசன், பூவை. இராமலிங்கம், சி. நடராசன். (காலை 9 மணிக்கு எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் மேயர் அபிபுல்லா பேக் உணவு வழங்குவார்; சை. காதர் பாட்சா கழகக்கொடி ஏற்றுவார்.)

அரியலூர்

கலைக் கல்லூரி தி.மா.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு ஒற்றுமைத் திடலில்; தலைவர்: கு. இளவரசன்; பேசுவோர்: செல்வி கஸ்தூரி, கோ. சிவப்பெருமாள், துரை. செல்வராசு பி.ஏ.பி.எல்., நா. வேங்கடாசலம் பி.ஏ.பி.எல்., பி. பழனிசாமி பி.ஏ., பி.எல்., த. தென்னரசு, துரை. மொழியரசன், செ. கலையரசன், ந. பாரதிதாசன், இரா. முத்தையன், பெ. கசேந்திரன், :ம. தமிழ் வேந்தன், ப. இராமச்சந்திரன்.

தொட்டியம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கே. வி. கே. சாமி திடலில்; தலைவர்: கே. இ. அனந்தர்; பேசுவோர்: மு. பழனிவேலன், மாலிக், எஸ். கே. வடிவேலு, பி. தண்டபாணி, வை. ப. இளம்பரிதி, க. இராசு, இரா. அண்ணாவி, சி. அரங்கநாதன், (கண்ணம்மா—தங்கராசு குழுவினரின் 'பூத்தது பொற்காலம்' எனும் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

15--3--68

ஈரோடு

13-வது வட்டம் தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு எஸ். கே. சி. ரோடு வள்ளுவர் திடலில்; தலைவர்: கு. சண்முகம்; பேசுவோர்: புலவர் பொன்னிவளவன், ப. ச. விசுவநாதன், மா. சுப்பிரமணியம் பி.ஏ.,பி.எல்., திருமதி டாக்டர் சேதுபாஸ்கரன், செ. அரங்கராசன், நா. நடேசன்.

பாடி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு காந்தியார் திடலில்; தலைவர்: வி. இராமதாஸ்; பேசுவோர்: வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வேலூர் நாராயணன் எம்.ஏ.,பி.எல்., எம்.சி., சட்டமன்ற உறுப்பினர்கள் என். கிருஷ்ணன், கே. எம். இராசகோபால், எம். கோபால், மற்றும் டி. எம். பார்த்தசாரதி, சி. இராமலிங்கம், வி. பி. அகிலன், மற்றும் பலர்.

இலங்கைத் தமிழ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நீலகிரி மாவட்டத்தில் பொட்டல் காடாகவும் வெட்டவெளியாகவும் பயனற்றுக்கிடந்த நிலங்களில் வெளிநாட்டு மரவகைகளைக் கொணர்ந்து பயிரிட்டு அவைகளினால் தொழில் வளம் பெருகவும் வனத்துறை வழிவகை செய்தது.

மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்கூடம், ஆண்டொன்றுக்கு 3,750 மெட்ரிக் டன் சாயப் பொருள் உற்பத்தி செய்யக்கூடிய ஆலையை நிறுவியுள்ளது; இந்தத் தொழிற்கூடத்தில் உற்பத்தி தவக்கப்பட்டு, இறக்குமதி செய்யப்படும் வெளிநாட்டுச் சாயப் பொருள்களுக்கு ஈடாகச் சாயப் பொருளைத் தயாரித்துச் சந்தையிலும் விற்பனை தொடங்கியுள்ளது.

பள்ளிப்பாளையத்திலுள்ளகாகித ஆலைக்கு மூங்கில் வினியோகிப்பதிலும், சிறுமுகையிலுள்ள ரேயான் ஆலைக்கு நீலகிரித் தைல மரம் வினியோகிப்பதிலும் நிறைவு கண்டுள்ளது.

1967—68-ல் 34,800 மெட்ரிக் டன் மூங்கில் காகித ஆலைக்கு வினியோகிக்கப்பட்டுள்ளது.

ரேயான் ஆலைக்கு கற்பூர மரம் வினியோகமும் நீலகிரி மாவட்டத்தில் ஆரம்பித்திருக்கிறது.

1967—68-ம் ஆண்டு ரூ. 1 கோடி 17 இலட்சம் மதிப்புள்ள 1082 டன் சந்தனக் கட்டைகளை வனத் துறை விற்பனை செய்தது. இந்த வருடத்தில் சில ரகச் சந்தனக் கட்டைக்கு மிகவும் உயர்ந்த விலை கிடைத்தது.

1966—67-ல் வனத் துறை எப்பொழுதையும்விட உயர்ந்த உச்ச வருவாயான ரூ. 3 கோடியே 19 இலட்சத்தை எட்டியுள்ளது. இந்த வருவாயில் சந்தனக் கட்டை விற்பனையிலிருந்து கிடைக்கும் தொகை கூடுதல் சதவிகிதமாக இருப்பதால், சந்தன மரக்காடு உற்பத்தி செய்வதிலும் வனத் துறை தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்க ரப்பர் தோட்டத்தில் ரப்பர் தயாரிக்கும் ஆலையும் நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஆலைக்குத் தேவையான கலங்களும், பொறிகளும், ரப்பர் ஷீட் தயாரிக்கும் பொறிகளும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு ஆலையில் நிறுவப்பட்டு வருகின்றன. இதுவரையில் 1662 ஹெக்டர் நிலப்பரப்பில் ரப்பர் தோட்டம் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்த தோட்டத்தில் பால் இறக்கும் வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

வருந்துகிறோம்

சட்டமன்ற தி. மு. க. உறுப்பினர் கொடைக்கானல் கே. எம். எம். மேத்தா அவர்களின் தந்தையாரும், பழம் பெரும் சுயமரியாதை இயக்கத் தோழருமான திரு. மே. கா. மலுக்கர் மேத்தா அவர்கள், 12—3—68 காலை பெரியகுளத்தில் இயற்கையெய்திய செய்தியறிந்து வருந்துகிறோம்.

தந்தையாரை இழந்து துயருறும் கே. எம். எம். மேத்தா அவர்கட்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரித்தாகுக.

—(ஆ-ர்.)

கூவம் முதல் கோட்டைவரை...!

வள்ளுவர் படம்
அரசாங்கப் பஸ்
பகிர்ந்து வாழ்தல்
கூவம்
கோட்டை
தகுதி
குடியிருப்பு

மேற்கண்ட சொற்களுக்கிடையே ஏதாவது அடிப்படை உறவு உண்டா? பொருளுள்ள பொருத்தம் இருக்குமா?

ஆனால் காமராசர் இவை அனைத்தையும் சேர்த்து ஒரு கதம்ப மாலையாக ஆக்கியிருக்கிறார்.

'பூ' விற்பவர்களைப் பார்த்திருப்பார் போலிருக்கிறது! எத்தனையோ வண்ணங்களில்—எங்கிருந்தோ வருகின்ற வெவ்வேறு மலர்களை ஒன்றாகத் தொடுத்துக் கண்ணுக்கு விருந்தாகக் கதம்பம் கட்டுகிறார்களல்லவா—அது போல, மேலே தரப்பட்டிருக்கும் வார்த்தைகளால், தரக்குறைவானதோர் கருத்து விருந்து படைத்திருக்கிறார் காமராசர்!

"வள்ளுவர் படத்தை பஸ்களில் மாட்டியிருக்கிறார்கள்; பகிர்ந்து வாழச் சொல்கிறார் வள்ளுவர்; ஆனால் என்ன நடக்கிறது?

"இவர்களெல்லாம் கூவத்தில் குடியிருக்கத்தக்கவர்கள்— கோட்டையிலே இருக்கத் தகுந்தவர்கள் அல்லர்!

"இவர்களுக்கு வள்ளுவர் படத்தை வைக்க என்ன தகுதி இருக்கிறது?"

காமராசர், திருவைகுண்டத்தில் பேசியதாக நேற்றைய காலைப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்தி இது!

வரிக்கு வரி நமது வசதிக்காகப் பிரித்துத் தரப்பட்டிருக்கிறதே தவிர, இவை அனைத்தும் மொத்தமாகக் காமராசர் பேசியதுதான்!

எதை நினைத்து அல்லது கேட்பவர்கள் எதனை உணரவேண்டுமென்று காமராசர் இப்படிப் பேசியிருக்கிறார் என்பது புரியவில்லை!

வள்ளுவரைப் பற்றி ஒரு வரி—அரசாங்கப் பஸ்களில் அந்தப் படம் இருப்பது பற்றி ஒரு வரி—பகிர்ந்து வாழ்வது பற்றி அவர் கூறியிருப்பதாக ஒரு வரி—'இவர்களெல்லாம்......' என தி. மு. க. அமைச்சரவையைப் பற்றி ஒரு வரி—கடைசியில் கூவம்—கோட்டை — குடியிருப்புத் தகுதி—ஆகியன பற்றி ஒவ்வொரு வரிகள்! இதில், பெருந்தன்மையான மையக் கருத்து எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை;

"நிர்வாகத்தை நடத்தும் தி. மு. க.-வினர், கூவத்தில் குடியிருக்கத்தக்கவர்கள்; 'கோட்டை'க்கு இலாயக்கற்றவர்கள்" என்ற அடிப்படை எண்ணத்தை வெளிப்படுத்துவதற்குத்தான் காமராசர், வள்ளுவர் படத்தையும்—அவர் கூறிய பகிர்ந்துண்டு வாழ்வதனையும்—அவர் படத்தை பஸ்களில் மாட்டுவதற்கு இருக்கவேண்டிய தகுதி பற்றியும் பேசியிருக்கிறார் எனக் கருதுவதற்கு இடமிருக்கிறது!

வெறும் உரலை இடித்துக்கொண்டிருக்கிறானென்றால், அவனுடைய மனதில் இடம் பெற்றிருப்பது 'அவல்' என்பது, கூறாமலே புலப்படுகிறதல்லவா?

காமராசரின் இந்த 'வெறும் பேச்சில்' பொருத்தம் இல்லை என்றாலும், அது உள்ளத்துப் பொருமலின் பிரதிபலிப்பு என்பதைக் காட்டுகிறதே!

சென்னையில் கூவமும் கோட்டையும், வள்ளுவருக்கு முன்பு இருந்தவை அல்ல!

ஒருவேளை இருந்திருந்தால், 'கோட்டையில் இருக்கத் தகுந்தவர்கள் மட்டும் என் படத்தை அரசாங்கப் பஸ்களில் மாட்டுங்கள்' என எழுதிச் சென்றிருப்பார்! அல்லது, 'கூவத்தில் வதிபவர்கள், என் படத்தைத் தொடுவதற்கும் அருகதையற்றவர்கள்' என்றாவது அறுதியிட்டுச் சொல்லிச் சென்றிருப்பார்!

காமராசரது கற்பனை வளத்தின் அதிருஷ்டமோ துரதிருஷ்டமோ—கூவமும் கோட்டையும், வள்ளுவருக்குப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வந்தவைகளாகிவிட்டன!

'தி.மு.க.-வினர், கூவத்தில் மட்டும் குடியிருக்கத்தக்கவர்கள்' என்பது, காமராசரது கருத்து போலும்!

ஆனால், 1967 தேர்தல் மூலம் 'இனி இவர்கள், கோட்டையில் இருக்கத் தகுதி பெற்றவர்கள்' என முடிவு எடுத்திருக்கிறார்கள்—மக்கள்!

1967 வரையில் கோட்டையில் இருந்தவர்கள், மென்மேலும் மக்கள் புறக்கணிப்புக்கு ஆளாகி, 'உண்மையிலேயே கூவத்தில் தள்ளப்பட்டுவிட்டால் என்ன செய்வது' என்ற அனுதாபம் காரணமாகத்தான் கழக அரசு, அதனைத் தடுத்தாட்கொண்டு, கூவத்தைத் துப்புரவு செய்து காங்கிரசுக்காரர்களுக்குப் 'பாதுகாப்பை'க் கொடுத்திருக்கிறது!

பகிர்ந்து வாழச் சொல்லிய வள்ளுவரை அரசாங்கப் பஸ்களில் மாட்டியதுதான், கூவத்தையும் கோட்டையையும் ஒப்பிட்டுக் காட்டச் சொல்லியிருக்கிறது காமராசரை!

உள்ளும் புறமும்

'சோஷலிசத்தை மனத்தில் கொண்டு காமராசர் இப்படிப் பேசியிருக்கிறார்' என்ற யூகத்தில், மேலும் செல்லுவோம்.

சோஷலிச சித்தாந்தங்களுக்கு எத்தனையோ 'அரசியல் பிதா'க்கள் இருக்க, காமராசர், வள்ளுவரை எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கதே!

'வள்ளுவருக்கு இந்த நிலை கிடைத்தது கழக அரசு ஏற்பட்டதற்குப் பின்னர்தானே' என்று கேட்கத் துணிகிறது; ஆனால், காமராசர் வெகுண்டு, மீண்டும், 'கூவம்—கோட்டை உதாரணத்துக்குச் சென்றுவிடுவாரே' என்றுதான் அஞ்சவேண்டியிருக்கிறது!

'எதைப் பகிர்ந்து வாழச் சொன்னார் வள்ளுவர் — அதன்படி தி.மு.க. நடக்கவில்லை' என்று காமராசர் சிறிது விளக்கியிருக்கலாம்; ஆனால், அதற்குத் திருக்குறளை அல்லவா படிக்க வேண்டும்—படித்திருக்க வேண்டும்?

அவரது நாட்டமோ, தி.மு.க.-வினரை கூவத்துக்கு ஒப்பிடுவதில்தானே! எனவேதான், வள்ளுவர் கூறிய 'பகிர்ந்து வாழ்தலை' மேற்சென்று விளக்காமல் அப்படியே விட்டுவிட்டு, அடுத்து தி.மு.க.-வினரின் தகுதிபற்றி எடைபோட்டிருக்கிறார்!

நடந்து முடிந்த ஐதராபாத் மாநாட்டில்தான், காமராசருக்குப் பதிலாக வந்த புதிய தலைவர் நிஜலிங்கப்பா பின்வருமாறு கூறினார்:—

1. ஏழை—பணக்காரன் வேறுபாட்டைப் போக்க—
2. ஏகபோக ஆதிக்கத்தைத் தடுக்க—
3. செல்வம் ஒரே திசையில் சென்று முடங்குவதைத் தவிர்க்க—

காங்கிரசு இதுவரை உருப்படியான செயல் ஏதும் செய்யவில்லை!

"புவனேசுவரத்தில் கூறப்பட்ட சனநாயக சோஷலிசம் இன்னும் சொல்லில்தான் இருக்கிறது; அந்த இலக்கினை நோக்கி நாட்டை இன்னும் காங்கிரசு அழைத்துச் செல்லவில்லை."

கடந்த சனவரி மாதம் 10-ந் தேதி பேசியிருக்கிறார் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா—தனது கட்சியின் 20 ஆண்டு அனைத்திந்திய நிர்வாகத்தினைப்பற்றி இப்படிப்பட்ட சொற்களில்!

ஆனால் காமராசர், வள்ளுவர் காலத்துக்குப் போய், 'பகிர்ந்து வாழ்தல்' தத்துவத்தைக் கிள்ளி எடுத்து வந்து ஓராண்டே நிறைந்துள்ள தி. மு. க. நிர்வாகத் திறனை உரைத்துப் பார்த்து, 'இவர்களுக்கு என்ன தகுதி' எனக் கேட்கிறார்!

ஒருவேளை, பஸ்களில் வள்ளுவரின் படம் மாட்டப்படாமலிருந்திருக்குமானால், காமராசருக்கு இந்தச் சிந்தனை பிறக்காமல் இருந்திருக்குமோ என்னவோ!

அல்லது, பஸ்களில் அவரது படம் மாட்டப்படுவதற்கு மட்டும் தான், 'பகிர்ந்து வாழ்தலை'ப் பற்றித் தெரிந்திருக்கும் தகுதி பெற்றாக வேண்டுமோ என்னவோ!

நம்மால் அதற்குமேல் சென்று, காமராசர் அளவுக்குச் சிந்தித்து ஆராய முடியவில்லை!

அமைதியுடன் ஓடி அழகு தந்து கொண்டிருக்கும் தேம்ஸ் நதியினை, ஆங்கிலேயர்கள் ஒரு காலத்தில், தங்கள் ஆதிபத்திய உணர்வின் சின்னமாக நினைத்ததுண்டு!

"சூரியன் கிழக்கில் உதிக்கும் வரையில், இந்த நாட்டை நாம் தான் ஆளுவோம்" என்ற காங்கிரசுக்காரர்களின் பதவி மோகத்துக்கு, காமராசர், சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையை ஒரு சின்னமாகக் கருதுகிறார்போலிருக்கிறது!

அவருக்கு வேண்டுமானால், கோட்டையில் அத்தனை மகிமை இருக்கட்டும்; அதற்காக, இன்று ஆட்சியில் இருப்பவர்களின் தகுதியைக் கூவத்துக்கு ஒப்பிடும் அளவுக்கு அவருக்கு 'பெரிய தன்மை' வருவது வியப்பாக இருக்கிறது!

இதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான், 'தி. மு. க.-வினர் இப்போதெல்லாம், தலைக்கு எண்ணெய் தடவி சீவி சிங்காரித்துக்கொண்டு வருகிறார்களே' என்று — தரமான பேச்சுக்கு இலக்கணம் வகுத்தார்—காமராசரது கட்சிக்காரர் கருத்திருமன்!

இப்போது, கேட்பவர்கள் மூச்சைப் பிடிக்குமாறு 'கூவம்' பற்றிப் பேசி துர்நாற்றக் கருத்துக்களைக் காமராசரே வாரி இறைக்கிறார்!

கழக நிர்வாகத்தின் நடவடிக்கை காரணமாகப் புதுக் கோலம் பூணப்போகும் கூவம் நதி, எதிர்காலச் சந்ததியினருக்கு, 'இப்படித்தான் இருந்தது' என்பதைக் காட்ட ஒரு நிரந்தரமான—அழித்து எழுத முடியாத ஆபாசப் பேச்சினை வெளியிட்டிருக்கும் காமராசருக்கு உண்மையில் கடமைப்பட்டிருக்கிறது!

—எஸ். ஆர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.